**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF MAHALIR NEETHIMANDRAM (FAST TRACK MAHILA COURT), THANJAVUR.

**SC. No - 53/2019**

**Prosecution PW - 11**

| | | | |
|---|---|---|---|
| Name | திருமதி. கீதா | Occupation | |
| Husband/Father Name | | Caste | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |
| Date | 06.05.2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
**(Accused kannan in Judicial custody in another case and not yet produced under P.T Warrant. However, the counsel for the accused is present and has stated that he has no objection for examination of the witness in the absence of the accused. Hence, this court is proceeding further.)**

முதல் விசாரணை: -

நான் கும்பகோணம் மேற்கு காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகின்றேன். நான் கும்பகோணம் கிழக்கு காவல்நிலையத்தில் கடந்த 29.11.2018 ம் தேதி நிலைய கு.எண் 322/2018 ச.பி 294(b), 307 இதச @ 294(b), 302 இதச வழக்கில் இறந்துபோன மலர்விழி வயது 28 என்பவரது பிரேதத்தை தஞ்சாவூர் மருத்துவ கல்லூாரி மருத்துவமனை சவக்கிடங்கில் 17.40 மணிக்கு பிரேதத்தை ஒப்படைத்து 30.11.2018ம் தேதி மதியம் 1.30 மணிக்கு பிரேத விசாரணைக்கு கடவுச்சீட்டு பெற்று அறிக்கை செய்து கொண்டேன். பிரேதவிசாரணை முடித்து பிரேதத்தில் இருந்து எடுக்கப்பட்ட சிகப்பு கருப்பு கலர் போட்ட பச்சை மஞ்சள் பூ போட்ட கலர் இரத்தக்கரை படிந்த நைட்டி ஒன்றை தனியறிக்கையுடன் நிலையம் வந்து ஆய்வாளரிடம் அறிக்கை செய்துகொண்டேன். பிரேதத்தை நல்லடக்கம் செய்ய மலர்விழியின் தந்தை ரவிச்சந்திரனிடம் ஒப்படைத்தேன். மேலும் ஆய்வாளர் உத்தரவுப்படி பிரேதத்திலிருந்து எடுக்கப்பட்ட உடல் உள்ளுறுப்புகளை தஞ்சாவூர் தடய அறிவியல் ஆய்வகத்திற்கு ஒப்படைத்தேன். இதுகுறித்து ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார். நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் நைட்டியைத்தான் மேற்சொன்ன பிரேதத்தில் இருந்து எடுக்கப்பட்டு ஆய்வாளரிடம் ஒப்படைக்கப்பட்ட இரத்தக்கரை படிந்த நைட்டியாகும். அது அசாபொ**3** ஆகும்.

குறுக்கு விசாரணை:-

29.11.2018ம் தேதி 17.40 மணிக்கு பிரேதத்தை தஞ்சாவூர் மருத்துவகல்லூரி மருத்துவமனை சவக்கிடங்கில் ஒப்படைத்தாகவும், பின்னர் 30.11.2018 தேதி 1.30 மணிக்கு உட்படுத்தியதாகவும் இந்த வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. பின்பு பிரேத பரிசோதனை பெற்றததாகவும் பிரேதத்தை நல்லடக்கம் செய்ய மலர்விழியின் தந்தை ரவிச்சந்திரன் என்பவரிடம் ஒப்படைத்தாகவும் பிரேதத்தில் இருந்து கைப்பற்றப்பட்ட சிவப்பு கலர் நைட்டியில் பச்சை மஞ்சள் நிற பூ போட்ட இரத்தக்கறை படிந்த நைட்டியை தனியறிக்கை மூலம் ஆய்வாளர் அவர்களிடம் ஆஜர் செய்ததாகவும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. பிரேதத்தின் உடல் உள்ளுறுப்புகளை தஞ்சாவூர் தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்து நிலையம் வந்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்திரவுபடி தட்டச்சிடப்பட்டு
என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும்
சாட்சிக்குப் படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால்
சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒம்/-ஜே.தமிழரசி,
அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
விரைவு மகிளா நீதிமன்றம்,
தஞ்சாவூர்.(மு.கூ.பொ)